## பெருநகர சென்னை மாநகராட்சி
## செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 62** **நாள்: 05.06.2017**

தகுதி வாய்ந்த வாக்காளர்களை வாக்காளர் பட்டியலில் அதிகளவில் சேர்த்தல் மற்றும் பிழைகளை நீக்கும்பொருட்டு இவ்வாண்டு ஜுலை மாதம் 1–ம் தேதி முதல் 31–ம் தேதி வரை சிறப்புப்பணி நடத்த இந்தியத்தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தச் சிறப்புப்பணியை அனைத்து மாநிலங்களிலும் தொடங்கி, ''எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது'' என்ற இந்திய தேர்தல் ஆணையத்தின் கருப்பொருளுக்கிணங்க அதிகளவில் இளைய வாக்காளர்களை, குறிப்பாக 18–21 வயதுக்குழுமத்தைச் சேர்ந்த வாக்காளர்களை பட்டியலில் சேர்க்க, தற்போது நடைபெறும் தொடர் திருத்தக்காலத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

ஜுலை 31–ம் தேதி நிறைவுறும் இச்சிறப்புப்பணியின்போது வாக்காளர் பதிவு அதிகாரிகளின் அலுவலகங்களில் படிவங்களைச் சமர்ப்பிக்கலாம். அஞ்சல் மூலமும் படிவங்களை அனுப்பலாம். www.elections.tn.gov.in என்ற இணையதளத்தின் மூலமும் இணையவழியில் விண்ணப்பிக்கலாம்.

09.07.2017 மற்றும் 23.07.2017 ஆகிய தினங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளன. சிறப்பு முகாம்கள் நடைபெறும் அந்நாட்களில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் அமர்ந்து நிரப்பப்பட்ட படிவங்களைப் பெறுவார்கள்.

இச்சிறப்பு பணியின்போது இறந்த வாக்காளர்களின் பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கும் பணியும் நடைபெறவுள்ளது. இறப்பு பதிவு செய்யப்பட்ட விவரங்கள் உள்ளாட்சி அலுவலகங்களிலிருந்து பெறப்பட்டு அதனடிப்படையில் இறந்த வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியல்களிலிருந்து இச்சிறப்புப்பணியின்போது நீக்கப்படும். இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**